
பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 01 | புதன்கிழமை | 17.07.2024 | அதிர்வு 351

**முன்னாள் கிரிக்கெட் வீரர்**

## தம்மிக்க நிரோஷன் சுட்டுப் படுகொலை!





இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் தம்மிக்க நிரோஷன் (வயது 41) 06▶



# 'மொட்டு' தனிவழி!

## முடிவு எடுத்தாகி விட்டது தம்மிக பெரேரா களத்தில்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (மொட்டுக் கட்சி) வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக நிற்காது. அது தனி வழி போகத் தீர்மானித்து விட்டது. அக்கட்சியின் சார்பில் பெரும்பாலும் கோடீஸ்வர வர்த்தகரான தம்மிக பெரேரா எம்.பி. வேட்பாளராகக் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. 06▶

## தன்னைத்தானே கடத்தி கணவனிடம் 50 இலட்சம் ரூபா கப்பம் கேட்ட 31 வயது மனைவியும், 21 வயது காதலனும்

### பொலிஸாரிடம் வசமாகச் சிக்கினர்




கர்ப்பிணியான மனைவியும் அவருடைய காதலனும் கணவனிடம் சுமார் 50 இலட்சம் ரூபாவைக் கப்பமாகக் கேட்டு தொல்லை கொடுத்த சம்பவம் கலவானை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

கர்ப்பிணிப் பெண்ணொருவர் சில நாட்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்தார். அவரைக் கலவான பொலிஸ் பிரிவிலுள்ள 06▶




நேற்றுக் கண்டியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க எதிர்வரும் செப்டெம்பர் 28ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடக்கக்கூடும் என்று அறிவித்துள்ளார்.

அப்படியாயின் இன்னும் எழுபத்தி மூன்று நாள்களில் தேர்தல். ஆனால் அக்டோபர் 05 அல்லது 12 ஆம் திகதிதான் ஜனாதிபதித் தேர்தல் பெரும்பாலும் நடக்கும் என்று கொழும்பு வட்டாரங்களில் 06▶

# அதிகரித்துள்ள பொருள்கள், சேவைக் கட்டணங்களை மின் கட்டணத் திருத்தத்தின் மூலம் குறைக்க முடியும்

## மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவிப்பு



"அதிகரித்துள்ள பொருள்கள் மற்றும் சேவைக் கட்டணங்களை, மின்சாரக் கட்டணத் திருத்தத்தின் ஊடாக 20 சதவீதத்தினால் குறைக்க முடியும்."

– இவ்வாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை, ஒக்டோபர் மாதங்களில் மின் கட்டணம் திருத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. கடந்த மார்ச் மாதம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பின்னர், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கோரிக்கையின் பேரில், ஏப்ரல் மாதத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமல் ஜூலை மாதம் திருத்தம் செய்ய இணக்கம் காணப்பட்டது. இந்த மின் கட்டணத் திருத்தம் ஜூலை 16 முதல் அமுலுக்கு வருகிறது.

அடுத்த கட்டணத் திருத்த முன்மொழிவை ஒக்டோபர் மாதத்தில் வெளியிட எதிர்பார்க்கப்படுகிறது. மின் கட்டணக் குறைவுக்கு பல முக்கிய காரணங்கள் உள்ளன. 2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், கடந்த காலங்களில் வங்கி வட்டி விகிதம் 36 வீதம் வரை அதிகரித்தது. ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே போர் நிலவி வருவதால், நிலக்கரி மற்றும் உலை எண்ணெய் விலையும் அதிகரித்தது. அமெரிக்க டொலரிற்கு செலுத்த வேண்டிய தொகை அதிரடியாக உயர்ந்தது. இதன்படி, 09 வருடங்களின் பின்னர் மின் கட்டணத்தைத் திருத்தியமைக்க வேண்டியிருந்தது. 2014 இற்குப் பிறகு, ஒகஸ்ட் 2022 இல் மின் கட்டணம் திருத்தப்பட்டது.

கடந்த இரண்டு வருடங்களைப் பொறுத்தவரை, மழைவீழ்ச்சியும் அதிகரித்துள்ளது. அதனால், நீர் மின் உற்பத்தி அதிகரித்தது. மேலும், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியும் அதிகரித்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதம், உமா ஓயா நீர்மின் நிலையத்தின் மின்சாரம் தேசிய உற்பத்தி கட்டமைப்புடன் இணைக்கப்பட்டது. கடந்த 18 மாதங்களில், இலங்கை மின்சார சபை செயற்பாட்டுச் செலவுகளைக் குறைத்துள்ளது. கடந்த இரண்டு வருடங்களில் இலங்கை மின்சார சபைக்கு எந்த ஒரு ஊழியரும் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவில்லை. தேவைப்பாடுள்ள 26 ஆயிரம் ஊழியர்களுக்குப் பதிலாக, இன்று 22 ஆயிரம் ஊழியர்கள் மாத்திரமே உள்ளனர்.

மேலும், செயற்பாட்டுச் செலவுகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க முடிந்தது. குறைந்த அளவு மின்சாரம் பயன்படுத்தும் மக்களுக்கு இந்த மின் திருத்தத்தின் மூலம் அதிக நிவாரணம் கிடைத்துள்ளது. 79 வீத வீடுகள் 90 அலகுகளிற்கும் குறைவான மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றன. அவர்களுக்கு பாரிய அளவு நிவாரணம் கிடைத்துள்ளது. மின்கட்டணம் அதிகரித்த போது ஒரு மின் அலகு உற்பத்திச் செலவு சுமார் 48 ரூபா. இன்று முப்பத்தைந்து ரூபா என்ற நிலையை எட்டியுள்ளது. உணவகங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு 25 வீதம் – 26 வீதம் வரை நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. மத வழிபாட்டுத் தலங்களுக்கு 30 வீதம் குறைக்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்கம், மின் கட்டணத்தை திருத்த முன்னர் நடைமுறையில் இருந்த கட்டணத்தை விடக் குறையும் வகையில் இந்த திருத்தத்தில், கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

மின் உற்பத்திச் செலவைக் குறைத்தால்தான் எதிர்காலத்தில் மின் கட்டணத்தைக் குறைக்க முடியும். அதற்கு குறைந்த செலவில் மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய மின் உற்பத்தி நிலையங்களை விரைவாக அமைக்க வேண்டும். இந்தப் புதிய மின் உற்பத்தி நிலையங்களை அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் நிர்மாணித்து முடிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி, அடுத்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மின் கட்டணத்தை, இதனை விடக் குறைக்க எதிர்பார்க்கப்படுகிறது. 180 அலகுகளுக்கு மேல் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் 189,000 பேர் மாத்திமே உள்ளனர். 30 அலகுகள் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் 290 ரூபா மட்டுமே செலுத்த வேண்டும். நீங்கள் 01 – 60 அலகுகளை பயண்படுத்தினால், நீங்கள் 790 ரூபா செலுத்த வேண்டும்.


மேலும், இந்த மின் கட்டணத் திருத்தத்தில் தொழிற்சாலைகள் மற்றும் சிறு வர்த்தகங்களுக்கு குறைந்தபட்சம் 20 வீதம் விலை குறைக்கப்பட்டுள்ளது. மின்சார விலை அதிகரிக்கப்பட்ட அதே தினத்தில் அதிகரிக்கப்படும் உணவுப் பொருள்களின் விலைகளையும் வர்த்தக நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் சேவைக் கட்டணங்களையும் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். சமீபகாலமாக எரிபொருள் விலையும் மண்ணெண்ணெய் விலையும் குறைந்துள்ளது. அந்தச் சந்தர்ப்பங்களிலும், பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் குறைவதை நாம் காணவில்லை. எனவேதான் இம்முறை மின்சாரத்தின் பாரிய கட்டணக் குறைப்பின் பலனை மக்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். குறைந்தபட்சம் 20 வீதம் விலை குறைக்க முடியும்.

மின்கட்டண அதிகரிப்பின் போது, எமது பிராந்திய நாடுகளின் மின் கட்டணம் குறித்து ஊடகங்கள் அதிகம் கதைத்தன. எனவே இம்முறை கட்டணக் குறைப்பு தொடர்பிலும் பிராந்திய மின் கட்டணம் மற்றும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குவது தொடர்பிலும் ஊடகவியலாளர்கள் ஒரு கருத்தாடலை உருவாக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தேர்தல் காலம் காரணமாக இந்த விலை திருத்தம் செய்யப்பட்டதாக சில ஊடக நிறுவனங்களும் ஊடகவியலாளர்களும் தெரிவிக்கின்றனர். ஆனால் இந்த கொள்கைகளை நாம் 2022 இல் தயாரித்தோம்.

அதன்படி, சிறப்பாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் காரணமாக இந்த திருத்தம் சாத்தியமாகியுள்ளது. நாங்கள் பிரபலமான முடிவுகளை எடுக்கவில்லை. சரியான கொள்கைகளின் அடிப்படையில் இவை அனைத்தையும் செய்ய முடிந்துள்ளது. மின் கட்டணத்தை உயர்த்தும் போது, ஜனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும் வழங்கப்படும் விளம்பரத்தைப் போன்று, விலை குறைக்கப்பட்டாலும், அதே விளம்பரத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் செயல்திறன் மற்றும் குறைந்த செயற்பாட்டுச் செலவுகள் கொண்ட உற்பத்தித் திட்டத்தை அறிமுகப்படுத்த நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். 2022 ஆம் ஆண்டுக்கு முன்னர், மின்சாரத் துறை நட்டத்திலேயே இயங்கியது.

ஆனால் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில், செயற்பாட்டு இலாபத்தை பதிவு செய்ய முடிந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டுடன் மின்சார சபைக்கு இதுவரை கிடைத்து வந்த நிதி கிடைக்காமல் தடைப்பட்டது. எனவே, மின்சார சபை இலாபம் ஈட்டும் நிலையை எட்ட வேண்டியதாயிற்று. எனவே, நிதி ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து செயற்பாட்டு இலாபத்தைப் பெற முடிந்தது. அதன்படி கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் திறைசேரியில் இருந்து மின்சார சபை நிதி பெற்றுக்கொள்ளவில்லை.

மின்சார சபை ஏனைய நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கடனில், பெரும் தொகையை மீளச் செலுத்தியுள்ளது. சோலார் பேனல்களை பொருத்தும் மக்களை ஊக்குவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. கூரை மேல் பொருத்தப்பட்ட சோலார் பேனல்கள் மூலம் ஆண்டுக்கு 150 மெகாவாட் மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்பிற்கு வழங்க திட்டமிடப்பட்டது. இதுவரை சூரிய சக்தி கட்டமைப்புக்கள் மூலம் 149 மெகாவாட் மின்சாரம் பெற முடிந்துள்ளது." – என்றார்.






# கம்பஹா மாவட்டத்தில் 67 பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

கம்பஹா மாவட்டத்தின் பாடசாலை விளையாட்டை மேம்படுத்தும் நோக்கில் 67 பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய, சாகல ரத்நாயக்கவின் வழிகாட்டலின் கீழ், ஹூழரவா எளைழைெ 2048 அமைப்பு மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் இந்த வேலைத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இங்கு கருத்து தெரிவித்த சாகல ரத்நாயக்க, தேசிய மட்டத்திலான திறமையான வீரர்களை உருவாக்குவதற்கு விளையாட்டின் பங்களிப்பு முக்கியமானதாகும் என்றும் வலியுறுத்தினார்.

அதேபோல், நாட்டில் சரிவு கண்டிருந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அர்பணித்திருக்கின்றார் எனவும், அந்தப் பொருளாதார வேலைத்திட்டத்தை முன்னோக்கி கொண்டுச் சென்று ஊழல் அற்ற, ஒழுங்குபடுத்தப்பட்ட பொருளாதாரக் கட்டமைப்புக்குள் இந்நாட்டின் பிள்ளைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்புவதே ஜனாதிபதியின் நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய காலநிலை மாற்றங்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, எதிர்கால சந்ததியின் விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்தும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், ஜனாதிபதியின் இளைஞர் விவகார மற்றும் நிலைபெறு அபிவிருத்தி பணிப்பாளர் சசிர சரத் சந்ர, ஹூழரவா எளைழைெ 2048 அமைப்பின் ஆலோசகர் கலாநிதி லசந்த குணவர்தன, அமைப்பின் தலைவர் டேன் போத்திவெல, இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் பாடசாலை அதிபர்கள், விளையாட்டு ஆலோசகர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.






# கொள்ளுப்பிட்டி வாகன விபத்தில் மணமக்கள் உட்பட 5 பேர் காயம்!

கொழும்பு – கொள்ளுப்பிட்டி, காலி வீதியின் ஸ்கூல் லேன் பகுதியில் மணமக்கள் சென்ற திருமணக் காரும் மற்றுமொரு காரும் வீதியில் பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் மணமக்கள் உட்பட ஐவர் காயமடைந்தனர் என்று கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் மணமகனும், மணமகளும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படவில்லை எனவும், திருமணக் காரின் சாரதி, மற்றைய காரின் சாரதி மற்றும் மோட்டார் சைக்கிள் செலுத்துநர் ஆகியோர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேற்படி மூவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், மோட்டார் சைக்கிள் செலுத்துநர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# யுனெஸ்கோ பணிப்பாளர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

யுனெஸ்கோ அமைப்பில் இலங்கை இணைந்து 75 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளதை முன்னிட்டு ஜனாதிபதி மாளிகையில்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவை யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் ஒட்ரே அசோலே சந்தித்துள்ளார்.

இலங்கையின் யுனெஸ்கோ அமைப்பின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று தாமரை தடாக திரையரங்கில் பிரதமர் தினேஷ் குணவர்தன, கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இதேவேளை, நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஒட்ரே அசோலே கண்டி மற்றும் தம்புள்ளை போன்ற வரலாற்று சிறப்பம்சங்களைக் கொண்டஇடங்களைப்பார்வையிடத்திட்டமிடப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# அரச ஊழியரான யுவதி குளிக்கும்போது வீடியோ எடுக்க முயன்ற போதனாசிரியர்

## வவுனியாவில் பரபரப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் வாடகை வீட்டில் தங்கியிருக்கும் அரச ஊழியரான இளம் யுவதி குளிப்பதைக் கைத்தொலைபேசியில் வவுனியா பல்கலைக்கழகப் போதனாசிரியர் ஒருவர் வீடியோ எடுக்க முயன்ற சம்பவம் ஒன்று வீடியோவாக வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியாவில் அரச ஊழியராக வேலை செய்யும் சகோதர மொழி ஊழியர் ஒருவர் வவுனியா, திருநாவற்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சில யுவதிகளுடன் இணைந்து தங்கியுள்ளார். அந்த வீட்டில் வவுனியா பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பிரிவில் போதனாசிரியராகப் பணியாற்றும் ஒருவர் குழு வகுப்புக்கள் நடத்தி வருகின்றார்.

குறித்த வீட்டில் அவர் வெளியில் கற்பித்துக் கொண்டிருந்த போது சகோதர மொழி அரச ஊழியரான யுவதி ஒருவர் குளியலறைக்குள் சென்று குளித்துள்ளார். இதன்போது குளியலறைப் பக்கம் சென்ற போதனாசிரியர் குளியலறையின் மேல் துவாரத்தின் ஊடாக கைத்தொலைபேசியை உயர்த்தி வீடியோ எடுக்க முயன்றுள்ளதுடன், அதன் பின் குளியலறையின் மறுபக்கம் தவன்று சென்றுள்ளார்.

அந்த அரச ஊழியரான இளம் யுவதி சத்தம் கேட்டு வெளியில் இருந்த சக யுவதிகளை அழைத்தபோது மேற்படி போதனாசிரியர் குனிந்து ஓடியபடி வெளியேறியுள்ளார்.

குறித்த காட்சிகள் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது.






Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
FM
88.9 HD3 & 105.9
INK DRIP
முரசு
DESIGN
WOLF.CA

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கணக்கிடப்படுகிறது.

எது, எப்படி என்றாலும் தேர்தலுக்கு இன்னும் 90 நாள்கள் கூட இல்லை. ஆனால் ஆளுந்தரப்பில் ஜனாதிபதியின் ஐ.தே.கட்சியும், மொட்டுக் கட்சியும் தத்தமது வேட்பாளர்கள் யார் என்பதை இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்காமல் பார்த்திருக்கும் – காத்திருக்கும் – இழுபறி நிலைதான்..!

நல்ல வேடிக்கைதான், போங்கள்...!

\+ + +

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு ஓடுப்பட்டுத் திரியும் தரப்பினரிடையே யாரைப் பொது வேட்பாளராக நிறுத்துவது என்று இழுபறி இன்னும் தொடர்கிறது.

வார இறுதியில் வெளியான தொலைக் காட்சிப் பேட்டி ஒன்று அவர்களுக்குக் குஷியை கிளப்பி விட்டிருப்பதாக தகவல்.

அந்தப் பேட்டியில் பொது வேட்பாளர் திட்டத்தை புகழ்ந்து தள்ளி, வரவேற்று நின்றார் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா.

அந்தப் பேட்டியின்படி பார்த்தால், 'பொது வேட்பாளராகக் களமிறங்குங்கள்..!' என்று யாராவது வெற்றிலை வைத்தால் அவர் விழுந்தடித்துக் கொண்டு – பெரிய பிகு பண்ணாமல் – வந்து விடுவார் என்று பொது வேட்பாளரை நிறுத்தும் திட்டத்தின் ஏற்பாட்டாளர்களில் ஒருவர் உறுதியாக – அடித்து – கூறுகின்றார்.

இல்லாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எப்படியும் சம்பந்தன் போல தாம் தலைவராகி விட வேண்டும் என்ற ஒரே நப்பாசையில் துடித்துக் கொண்டிருக்கும் மாவை, யாராவது போய் கேட்டால் பொது வேட்பாளராக நிச்சயம் விழுந்தடித்து வந்து விடுவார் என்று உறுதியாக நம்பலாம்.

இதற்குள் அவர் போனால்தான், பின்னர் கையோடு வரக்கூடிய மாகாண சபை தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக தாங்கள் களம் இறங்கலாம் என்று இப்போது பிளான் பண்ணும் தரப்புக்கள் தாங்களே பொது வேட்பாளர் சாகரத்துக்குள் மாவையைக் கூட்டிச்சென்று தள்ளி விடுவர். அதற்காக அவர்கள் தலையால் கிடங்கு கூடக் கிண்டுவார்கள் என்று நம்பலாம்.

பாவம் மாவையர்.....!

## தன்னைத்தானே கடத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கோவிந்தபுரத்தில் கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

கர்ப்பிணியான அந்தப் பெண், மாதாந்தக் கிளினிக்குக்குச் செல்வதாகக் கூறிவிட்டு, 9ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வீட்டை விட்டுச் சென்றிருந்தார். எனினும், அன்றைய தினம் தனது மனைவி, வீட்டுக்குத் திரும்பவில்லை என அவருடைய கணவன், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்நிலையில், அந்தப் பெண்ணை விடுவிக்க வேண்டுமாயின் 50 இலட்சம் ரூபா பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று இனந்தெரியாத தொலைபேசி அழைப்பொன்று, கணவனின் அலைபேசிக்கு வந்துள்ளது. அத்துடன், வட்ஸ்அப் இற்கும் குறுந்தகவல் போடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸாரின் கவனத்துக்கு அந்தப் பெண்ணின் கணவன் கொண்டுவந்தார். அவற்றைக் கொண்டு விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் 31 வயதான பெண்ணையும், அவருடைய காதலன் என அறியப்பட்ட 21 வயதான இளைஞரையும் கைது செய்தனர்.

இணையத்தளத்தின் ஊடாக 5 மாதங்களுக்கு முன்னர் தொடர்பில் இருந்த இவ்விருவரும் பின்னர் காதலர்களாக மாறிவிட்டனர். காதல் வலையில் விழுந்த பெண்ணை, சியம்பலாண்டுவ நகருக்கு வரவழைத்த காதலன், அந்தப் பெண்ணைக் கலவான – வெத்தேகொட பகுதியிலுள்ள தன்னுடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

அங்கு வைத்தே, கணவனிடமிருந்து கப்பம் பெறுவதற்கான அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். விசாரணைகளின் பிரகாரம் இவ்விருவரையும் கைது செய்த பொலிஸார், அந்த இளைஞரை சியம்பலாண்டுவ நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் நாளை 18ஆம் திகதி வரையிலும் மேற்படி நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கர்ப்பிணியான அந்தப் பெண், அவருடைய பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## 'மொட்டு' தனிவழி!...

ஆயினும், இந்த முடிவை மொட்டுக் கட்சி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் முரண்பாடு ஏற்பட்ட காரணத்தால் முன்னெடுக்கின்றதா அல்லது அவருடன் சேர்ந்து திரைமறைவில் திட்டமிடப்பட்ட தந்திரோபாய ஏற்பாடுகளுக்கு அமைய இது நடக்கின்றதா என்பது தெரியவில்லை என தென்னிலங்கை செய்தி வட்டாரங்கள் கூறுகின்றன.

சரியாக ஒரு வாரத்துக்கு முன்னர் – கடந்த புதன்கிழமை காலை ஜனாதிபதியின் இல்லத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவரின் உதவியாளர் சாகல ரத்நாயக்கா இருவரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மொட்டுக் கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரை விருந்துபசாரத்துடன் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பின் பின்னரே, வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரடியாக ஆதரிப்பதில்லை, மொட்டு தனது சொந்த வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டதாக அறியவந்தது.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர், கட்சியின் உயர்மட்டத் தரப்பினரைச் சந்தித்த பஸில் ராஜபக்ஷ, "நான் மாப்பிள்ளையைத் (வேட்பாளரை) தருகின்றேன். நீங்கள் கல்யாணத்துக்கு (தேர்தலுக்கு) ஆயத்தமாகுங்கள்" – என்று பணிபுரை வழங்கினார் எனவும் அறியவந்தது.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர்தான், "நான் ராஜபக்ஷக்களைப் பாதுகாக்க மாட்டேன். நீங்கள் நாட்டைக் காக்க என்னுடன்வந்துசேருங்கள்..."–என்றஅழைப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் ஏனைய ஐக்கிய மக்கள் சக்தி பிரமுகர்களுக்கும் விடுத்தார் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

மொட்டு தனிவழி போனாலும், இந்தத் தேர்தல் பிரசாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கடுமையாக இலக்கு வைத்துத் தாக்காது என்றும் கூறப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் மொட்டுக் கட்சி அணி சேர்ந்தால், சிறுபான்மையினரான தமிழ் – முஸ்லிம் – மலையக மக்களின் வாக்குகளை ரணில் விக்கிரமசிங்க இழக்கவும், அந்த வாக்குகள் சஜித் பிரேமதாஸவுக்குக் கிட்டவும் வழி ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டதாகத் தெரிகின்றது.

மொட்டுக் கட்சி ரணிலுக்கு ஆதரவான நிலை எடுத்தால், மொட்டுத் தரப்பில் உள்ள பாரம்பரியமான ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பு சக்திகள் இந்த முறை தேர்தலில் தமது வாக்குகளை அநுரகுமார திஸநாயக்கவுக்குக் கொட்டித் தள்ளி விடும் ஆபத்து உண்டு என்றும் சுட்டப்பட்டதாம்.

இவற்றைக் கருத்தில்கொண்டு, மொட்டுக் கட்சி தனிவழி போகும் முடிவை ராஜபக்ஷக்களும் ரணில் விக்கிரமசிங்கவும் இணக்கம் கண்டு எட்டினர் என்று சில நம்பகமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

மொட்டுக் கட்சி வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனி வழி போனாலும், தேர்தல் முடியும் வரை தற்போதைய அரசுக்கான ஆதரவை அது விலக்காது என்றும், தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வென்றால், இந்த நாடாளுமன்றத்தை கலைக்காமல் அதன் கடைசிக் காலம் வரை அதனை நீடிக்க அவர் அனுமதிப்பார் என்றும் இணக்கம் காணப்பட்டதாகவும் கூறப்பட்டது.

## தம்மிக்க நிரோஷன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சுட்டுக் கொல்லப்பட்டார்.

அம்பலாங்கொடை– கந்தேவத்தை பகுதியில் உள்ள அவரது இல்லத்துக்கு முன்பாக நேற்று அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தம்மிக்க நிரோசன் இலங்கையின் 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் அணியின் சார்பில் போட்டிகளில் பங்கேற்றுள்ளார் என்பதுடன், முதல்தர போட்டிகளிலும் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவராகவும் தம்மிக்க நிரோசன் இருந்துள்ளார்.

# ஓமானில் பணிபுரியும் இலங்கையர்களை பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தல்

ஓமான் தலைநகர் மஸ்கட்டில் பணிபுரியும் இலங்கையர்களை பாதுகாப்பாக இருக்குமாறு அந்த நாட்டுக்கான இலங்கை தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

ஓமானின் அல் -வாடி அல் -கபீர் பகுதியில் உள்ள பள்ளிவாசலுக்கு அருகில் நேற்று நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 4 பாகிஸ்தான் பிரஜைகள் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

இந்தப் பகுதியில் அதிகளவான இலங்கையர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

இந்த நிலையில். அங்கு மோதல் நிலைமை மேலும் அதிகரிக்கக்கூடும் என்ற அச்சம் நிலவுவதால் அங்குள்ள இலங்கையர்களை குறித்த பகுதிக்குச் செல்ல வேண்டாம் என ஓமானுக்கான இலங்கைத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், அங்குள்ள இலங்கையர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லையாயின், ஓமானுக்கான இலங்கை தூதரகத்தின் 24 69 78 410 என்ற இலக்கத்திற்கோ அல்லது ஓமான் பொலிஸாரின் 24 52 1885 என்ற இலக்கத்திற்கோ தொடர்பு கொள்ளுமாறு ஓமானுக்கான இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேர்தல் அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் பற்றிய அறிவிப்பை வெளியிட்டு தேர்தலுக்கான ஏற்பாடுகளை - நடவடிக்கைகளை - முன்னெடுக்கும் அதிகாரம் இன்று அதிகாலையுடன் தேர்தல் ஆணையத்துக்கு வந்துவிட்டது.

எனினும் தேர்தல் ஆணையம் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை இந்த மாத இறுதியில் வெளியிடத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

தேர்தல் அறிவிப்பை வெளியிடுவதற்கான காலம் வந்தவுடனேயே தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிட்டாக வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை. வேட்பு மனு ஏற்றல், தேர்தல் திகதி அறிவித்தல், சட்டபூர்வமாக உரிய பிரச்சார காலத்தை வழங்குதல், வாக்களிப்பை நடத்தி முடித்து, வாக்குகளை எண்ணி, தேர்தல் முடிவை அறிவித்தல் போன்றவற்றை இந்தத் தடவை அக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் ஆணையம் நடத்தி முடிக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் காலஅவகாசத்தைக் கணக்கிட்டுக் கொண்டால் போதுமானது.

இம்மாத இறுதியில் தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை தேர்தல் ஆணையம் விடுக்குமாயின், உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடித்து விட முடியும். அதற்கு போதிய கால அவகாசம் உண்டு.

ஆயினும், கிடைத்த காலத்திலேயே தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை தாமதிக்காமல் தேர்தல் ஆணையம் விடுக்குமாயின், அந்தஅறிவிப்புவிடுத்தகையோடு தேர்தல் சட்டங்கள், ஒழுங்கு விதிகள், செயல்பாடுகள் நடைமுறைக்கு வந்துவிடும்.

தேர்தலில்பங்குபற்றும்தரப்புக்கள்-குறிப்பாக அதிகாரத்தை வைத்திருக்கும் தரப்புகள் - தேர்தலை ஒட்டிய கடைசி நேர சீர்கேடுகள், குளறுபடிகள், அரச சொத்துக்கள் மற்றும் அரச ஆளணிகளை தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்துதல் போன்றவற்றை நேரத்துடனேயே கட்டுப்படுத்தி, கண்காணித்து, நெறிப்படுத்த வாய்ப்புக் கிடைக்கும் என்று கருதப்படுகின்றது. அதனால் நேரத்துடன் தேர்தல் பற்றிய அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிடுவது எப்போதும் பாதுகாப்பானது, வரவேற்கத்தக்கது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறிப்பாகத் தேர்தல் அறிவிப்புக்கு பின்னரான அரச, பொலிஸ் அதிகாரிகளை இடமாற்றுவது, மக்கள் நலத் திட்டங்களை வாரி வழங்குவது போல புதிய அறிவிப்புகளை வெளியிடுவது போன்றவற்றைத் தேர்தல் ஆணையம் நேரடியாகக் கண்காணித்து கட்டுப்படுத்தக் கூடிய நிலைமை ஏற்படும்.

தேர்தல் அறிவிப்பைப் பிற்போடுவதால் ஆளும் தரப்பு கடைசி நேரம் வரை இந்தத் தேர்தல் லீலைகளை நடத்துவதற்குவாய்ப்பளிக்கஇடமளிப்பதாகிவிடும்.

கடைசி ஜனாதிபதி பதவியேற்ற நாளுக்கு சரியாக ஐந்து வருடங்கள் முடிவதற்கு நான்கு மாதங்கள் முன்பதாக இந்த அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு வரும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் வென்ற கோட்டாபய ராஜபக்ஷ 2019 நவம்பர் 17ஆம் திகதி பதவியேற்றார். அதன்படி அப்போது பதவியேற்ற ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடக் கணக்கின்படி 2024 நவம்பர் 17ஆம் திகதி பூர்த்தியாகவேண்டும். ஆனால்அதற்குஇரண்டு மாதங்கள் தொடக்கம் ஒரு மாதம் வரையான கால இடைவெளியில் அடுத்த தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுதான் தேர்தல் சட்டம். அதன் பிரகாரம் 2024 செப்டம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் ஒரு தினத்தில் தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டும். அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் - அதாவது ஜூலை 17ஆம் திகதி முதல் தேர்தலை அறிவித்து, தேர்தல் சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்து, வேட்பு மனுக்கள் ஏற்றலுக்கான திகதியை அறிவிக்கும் பணியை தேர்தல் ஆணையம் தொடங்க வேண்டும் என்று சட்டம் எதிர்பார்க்கின்றது.

இப்படிப் பார்த்தால் அடுத்த இரண்டு, இரண்டரை மாதங்களுக்குள் தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டும்.

அப்படியாயின்இறுதிநேரம்வரைகாத்திருக்காமல், தேர்தல் சட்டங்களை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான தேர்தல் அறிவிப்பை காலம் இழுத்தடிக்காமல் தேர்தல் திணைக்களம் விரைந்து வெளியிடுவது தான் நல்லது.





# காவிரி பிரச்சினையில் உச்ச நீதிமன்றத்தை நாட தமிழக அனைத்துக் கட்சி கூட்டத்தில் தீர்மானம்

காவிரி நீர் விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தை நாட ஸ்டாலின் தலைமையிலான அனைத்துக் கட்சி கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் காவிரி ஒழுங்காற்றுக் குழு பரிந்துரைத்த படி தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட முடியாது என கர்நாடக அரசு அறிவித்திருந்தது.

இந்த நிலையில் கர்நாடக அரசின் அறிவிப்பை ஏற்க முடியாது என தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் நேற்று இடம்பெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழகத்துக்குக் கிடைக்க வேண்டிய நீரினை சென்ற ஆண்டு கர்நாடக அரசு விடுவிக்காததால் விவசாயிகளுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டது.

இதுதொடர்பாக உச்ச நீதிமன்றத்தை நாடி அதன் பின்னர் நீரைப் பெற்றோம். இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை சாதகமாக இருக்கக்கூடிய சூழலிலும் கர்நாடக அரசு இவ்வாறு நடந்துகொள்வதை எந்தவிதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே தேவை ஏற்படின் மீண்டும் உச்ச நீதிமன்றத்தை நாடி அனைத்து சட்டபூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம்.

இந்த தீர்மானங்களின் அடிப்படையில் தேவைப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் முழு முயற்சியோடு மேற்கொண்டு காவிரி டெல்டா விவசாயிகளின் உரிமைகளை இந்த அரசு நிலைநாட்டும் என உறுதியளிக்கிறேன்.” – என்றார்.

# அடிப்படை நிர்வாக அறிவு இல்லாத தி.மு.கவின் திராவிட மாதிரி அரசு

## அண்ணாமலை சீற்றம்



“மின் உற்பத்தியைப் பெருக்காமல், விலைக்கு வாங்கும் மின்சாரத்தின் அளவை அதிகரித்துக் கொண்டே இருந்தால், மீண்டும் மீண்டும் மின் கட்டண உயர்வுக்குத் தான் வழிவகுக்கும். இந்த அடிப்படை நிர்வாக அறிவு கூட இல்லாத தி.மு.கவின் திராவிட மாதிரி அரசு.”

– இவ்வாறு தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகளில், சொத்து வரி, மின்சாரக் கட்டணம், குடிநீர் கட்டணம், பால் விலை, பத்திரப் பதிவு கட்டணம், என அனைத்தையும் பல மடங்கு உயர்த்தி, கட்டண உயர்வைப் பொதுமக்கள் தலையில் தி.மு.க. அரசு சுமத்தியுள்ளது.

தற்போது விக்கிரவாண்டி இடைத்தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும், மீண்டும் ஒரு முறை மின் கட்டணத்தை உயர்த்தி, பொதுமக்களுக்கு அதிர்ச்சி அளித்துள்ளது.

தமிழகம் முழுவதும், சூரிய ஒளி மின்சார உற்பத்தி உள்ளிட்ட மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, மாதாந்த மின் கட்டண நடைமுறையை உடனடியாக அமல்படுத்த வேண்டும்.” – என்றார்.

# தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்தார் ராகுல் காந்தி



நீட் தேர்விற்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றமைக்காக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் முதல்வருக்கு எழுதியுள்ள கடிதத்தில்

”நீட் தேர்வு நமது உயர்கல்வி அமைப்பில் உள்ள அப்பட்டமான குறைபாடுகளை அம்பலப்படுத்தியுள்ளது. இத்தேர்வினால் 24 லட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உரிய தீர்வு கிடைக்கவேண்டும்.

அத்துடன் பொது மருத்துவ கல்வி முறையை கட்டமைப்பதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக உள்ளது. இதன் விளைவாக வலுவான பொது சுகாதார அமைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது. விரைவில் மு.க. ஸ்டாலினைச் சந்திக்கத் நான் ஆவலுடன் காத்திருக்கின்றேன்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

# டொனால்ட் ட்ரம்புக்கு 375.80 கோடி ரூபா பண உதவி வழங்குகின்றார் எலான் மஸ்க்



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு தேர்தல் நிதியாக 375.80 கோடி ரூபாவை எக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் எலான் மஸ்க் கொடுக்க உள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நவம்பர் 5 ஆம் திகதி நடக்கவுள்ள நிலையில், ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் போட்டியிடுகிறார்.

இவரை எதிர்த்து, குடியரசு கட்சியைச் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகிறார்.

இந்த நிலையில், ஜனாதிபதி தேர்தலில், எலான் மஸ்க் நடுநிலை வகிக்க உள்ளார் என தகவல் வெளியானது.

எனினும், ட்ரம்ப் மீதான துப்பாக்கிசூடு நடத்தப்பட்டதை தொடர்ந்து, தேர்தலில் ட்ரம்பை ஆதரிப்பதாக எலான் மஸ்க் அறிவித்தார்.

அதற்கமையவே, ட்ரம்பிற்கு, 4.5 கோடி டொலர் தேர்தல் நிதியாக எலான் மஸ்க் கொடுக்க உள்ளார் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், ட்ரம்பிற்கு தேர்தல் நிதியாக தொழிலதிபர்கள் ஷான் மாகுவேர், ஜான் ஹெரிங் ஆகியோர் தலா 5 லட்சம் டொலர்கள், கேமரூன் மற்றும் டைலர் விங்க்லெவோஸ் தலா 2.5 லட்சம் டொலர்கள் நன்கொடை வழங்கி உள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# எஸ்டோனியாவின் பிரதமர் காஜா கல்லாஸ் இராஜினாமா

ஐரோப்பிய நாடான எஸ்டோனியாவின் பிரதமர் காஜா கல்லாஸ் தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளார்

அதன்படி கடந்த மூன்று அரை ஆண்டுகளாக பிரதமராக இருந்த இவர் தற்போது ஐரோப்பிய ஒன்றியத்துக்கான வெளியுறவு மற்றும் பாதுகாப்பு கொள்கை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்

இதனால், பிரதமர் பதவியை இராஜினாமா செய்ய அவர் முடிவு செய்துள்ளார். இதனையடுத்து அவரது இராஜினாமா கடிதத்துக்கு அந்த நாட்டு ஜானாதிபதி அலார் காரிஸ் ஒப்புதல் அளித்துள்ளார்.



# 42 பெண்களின் சடலங்கள் கென்யாவில் மீட்கப்பட்டன



கென்யாவின் நைரோபிக்கு அருகிலுள்ள கல்குவாரி ஒன்றில் அதிகளவான பெண்களின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன

இதை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பின்னர் சந்தேகநபர் தெரிவிக்கையில். மனைவி உட்பட 42 பெண்களைக் கொன்று சடலங்களை அந்த இடத்தில் வீசியதாக வாக்குமூலம் அளித்துள்ளார்.

கொலை செய்யப்பட்ட பெண்களுடையது என நம்பப்படும் பல்வேறு சந்தேகத்திற்கிடமான பொருள்கள் அவரது வீட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளன என அந்த நாட்டு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# திருக்கோவில் 'கந்தபாணத்துறை' நாயகனுக்கு நாளை வியாழக்கிழமை 18இல் கொடியேற்றம்!



(வடிவேல் டினேஸ்)

கிழக்கிலங்கை அருள்மிகு திருக்கோவில் ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி முருகன் ஆலயத்தின் இவ் வருட உற்சவம் நாளை 18 திகதி கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

கிழக்கில் பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களில் முருகனின் படையெடுப்பு காலத்தின் வரலாற்றை கொண்டமைந்த தேசத்து ஆலயம் திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயமாகும்.

### மகோற்சவ பூசைகள்

தொடர்ந்து எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 04 (நான் காம்) திகதி வரை பூசைகள் இடம் பெறும். அக்கரைப் பற்று, காரைதீவு, விநாயகபுரம், திருக்கோவில், தம்பிலு வில் பொது மக்களின் பூசை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

இந்த ஆண்டிற்கான பூசைகள் மகோற்சவ பிர தம குரு சிவகாம வித்தியாபூசணம், சிவாச்சாரிய தில கம், ஜோதிட வித்தியாத்துவ நிதி விபுலமணி சிவஸ்ரீசண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் இடம் பெறவுள்ளன.

### இவ் வருட உற்சவம்

கந்தபாணத்துறை (திருக்கோவில்) சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் இவ் வருட உற்சவம் நாளை 18 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஒகஸ்ட் 04 (ஞாயிற்றுக்கிழமை) கடல் கட்டுதலை அடுத்து இடம் பெறும் சமுத்திர தீர்த் தோற்சவத்துடன் இனிதே நிறைவு பெறும்.



### ஆடி அமாவாசை

தாய், தந்தையை இழந்தவர்களும் கணவனை இழந்த மனைவிகளும் ஆடி அமாவாசை விரதம் இருந்து தீர்த்தமாடுவது மரபுவழியாக கடைபிடிக்கப் பட்டு வருகின்றது.

அந்த வகையில் திருக்கோவில் முருகன் ஆலயம் ஆடி அமாவாசை தீர்த்தத்திற்கு பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்குகிறது.

வருடம் தோறும் பல்லாயிரக்கணக்கன பக்தர்கள் திருக்கோவில் ஆலயத்தில் ஆடியமாவாசை தீர்த்த மாடி தங்களது பிதுர் கடன்களை தீர்ப்பது வழமை. கடந்த 2023 வருடம் பல்லாயிர கணக்கான பக்தர்கள் தங்களது பிதுர் கடன்களை நிறைவேற்றியமை குறிப் பிடத்தக்கது.

### ஆலய வரலாறு

முருகப் பெருமான் மற்றும் அவரது படைத்தளபதி வீரபாகு உள்ளிட்டவர்கள் சூர பத்மனுடன் போரிட்ட போது முருகப் பெருமானால் ஏற்றப்பட்ட வேலானது வாகூர மலையினை இரண்டாக பிளந்தது.

இவ்வாறு வாகூர மலையினை பிளந்த ஒளி பிளம்பு நாகர்முனை என அறியப்பட்ட திருக்கோவில் பகுதியில் உள்ள வெள்நாவல் மரத்தில் வேல் வடிவில் வடக்கு பகுதி நோக்கி தரித்து நின்றபோது அதற்கு கொத்து பந்தல் அமைத்து வேடுவர்கள் வழிபட்டு வந்த பண்டைய வரலாற்றை கொண்ட ஆலயமாக திருக்கோவில் முருகன் ஆலயம் காணப்படுகின்றது.

அதுமட்டுமல்ல சோழ நாட்டு இளவரசி இவ் வேலின் மகிமையினை கண்டு தனக்கு குழந்தை வேண்டி விரதமிருந்து குழந்தை கிடைத்ததும் நேர்த்தி கடனை நிறைவேற்ற இந்தியாவில் இருந்து சிற்பாசாரி களை வரவழைத்து கருங்கல்லால் கருவறை, சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட ஆலயத்தை அமைத்து கொடுத்தார் எனவும் வரலாறுகளில் கூறப்படுகிறது.

தங்கம்மா என்ற பெண் முருகனுக்கு ஆராத்தி எடுத்து வந்த நிலையில் அவர் முதுமையடைய அவர் முருக னுக்கு ஆராத்தி எடுப்பதில் இருந்து நீக்கிய வேளை

தொடர்ச்சி ▼

# திருக்கோவில் 'கந்தபாணத்துறை' நாயகனுக்கு நாளை வியாழக்கிழமை 18இல் கொடியேற்றம்!



தொடர்ச்சி▲

தங்கம்மாள் முருகனை வழிபட அவர் சிறுமியாக மாறிய அதிசயம் இங்கே நடந்தேறியுள்ளது.

வடக்கு நோக்கி காணப்பட்ட ஆலயம் கடற்கரை பக்கம் நோக்கி திரும்பி காணப்பட்டதை அடுத்து இது திருக்கோவில் எனப் பெயர் பெற்றது.

அத்துடன் போர்த்துக்கீசர் காலத்தில் அழிவடைந்த ஆலயங்களுள் இதுவும் உள்வாங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அழிவடைந்த ஆலயத்தின் கருவறை சிதைவடையாமல் காணப்பட்ட நிலையில் பின்னர் இது புனரமைப்பு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

பாண்டிய, சோழர்களினால் இவ் ஆலயம் புனர மைப்பு பெற்றுள்ளதுடன் முருகப் பெருமானின் நெருங்கிய வரலாற்றுடன் தொடர்புபட்ட திருத்தலமாக காணப்படுகின்றது.

### வேறு பெயர்கள்

நாகர் முனை, திரும்பிய கோவில், திருக்கோவில், கந்தபாணத்துறை என இவ் ஆலய அமைவிடம் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

### தற்போதைய அமைவிடம்

திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆல யத்தின் இராஜகோபுர பணிகள் தற்போது வரை இடம் பெற்று வருகின்றமையுடன் ஆலய புனருத்தான பணிகளும் இடம் பெற்று வருகின்றன. கிழக்கிலங் கையில் கிழக்கு முனையத்தில் இருந்து சுமார் 30 கி.மீ வடக்காக செழிப்பு மிக்க திருக்கோவில் பிரதேசம் அமைந்துள்ளது.



# நிஸாம் காரியப்பரின் கவிதை நூல் வெளியீடு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியு மான நிஸாம் காரியப்பரின் 'அந்த கல் முனைக்குடி நாள்கள்' எனும் கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை 20 ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்– த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் லோட்டஸ் கலரியில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் விசேட அதிதிகளாக நாடாளு மன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம், ஓய்வு பெற்ற வெளிநாட்டு அமைச்சின் அதிகாரியும் இலங்கைக்கான முன் னாள் தூதுவருமான எச்.ஏ.அஸீஸ், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தமிழ் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.



# மாணவர்களுக்கு ஜனாதிபதியின் புலமைப்பரிசில் வவுனியாவில் திட்டம் நேற்று ஆரம்பித்து வைப்பு











**(கே.வசந்தன்)**

வறிய மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஜனாதிபதியின் புலமைப் பரிசில் திட்டம் வவுனியா மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா, மதவுவைத்தகுளம் பகுதியில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் குறித்த நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

நாடு முழுவதும் வறிய மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் பல பாடசாலைகளிலும் இருந்து பல மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதற்கமைவாக வவுனியா மாவட்டத்தில் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளை சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதியின் புலமைப் பரிசில் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன், ஜனாதிபதி செயலக மேலதிக சிரேஷ்ட செயலாளர் சமன்பந்துலசேன, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், வவுனியா தெற்கு மற்றும் வடக்கு வலய கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.


















# மட்டக்களப்பில் முள்ளந்தண்டால் பாதிக்கப்பட்ட 13 பேருக்கு காற்று மெத்தைகள் வழங்கி வைப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களின் “படுக்கை புண்ணற்ற வாழ்வுக்கு காற்று மெத்தை“ எனும் தொனிப்பொருளில் இங்கிலாந்து மனிதநேய அமைப்பின் அனுசரனையுடன் டேற்றா சரீட்டி, தமிழ் பரா விளையாட்டுக்கழகம் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட 13 பேருக்கு காற்று மெத்தைகள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.

டேற்றா சரீட்டி , தமிழ் பரா விளையாட்டுக்கழகம் இணைந்து ஏற்பாடு செய்த இந்த காற்று மெத்தை வழங்கிவைக்கும் நிகழ்வு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இன்று இடம்பெற்றது.

இதில் அதிதிகளாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வாசுதேவன், சமூகசேவை உத்தியோகத்தர் எஸ்.அருள்மொழி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் சம்மேளனத்தின் தலைவர் எஸ்.அருள், டேற்றா சரீட்டி அமைப்பின் பணிப்பாளர் கே.ஜீவராஜா, ஆலோசகர் எல்.ஆர். டேவிற், ஆகியோர் கலந்து கொண்டு 13 பேருக்கான காற்று மெத்தைகளை வழங்கி வைத்தனர்.

வடக்கு கிழக்கில் முள்ளந்தண்டால் பாதிக்கப்பட்ட 200 பேருக்கு மேல் இருக்கின்ற நிலையில் முதற்கட்டமாக 50 பேருக்கு இந்த காற்று மெத்தை வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
















# காத்தான்குடியில் வீடு ஒன்றின் மீது வீசப்பட்ட குண்டுத் தயாரிப்புத் தொடர்பில் விசாரணை!



**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பூநொச்சிமுனை பகுதியில் வீடு ஒன்றின் மீது திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற குண்டு தாக்குதலில் பாவிக்கப்பட்ட குண்டு தொடர்பில் பல ஊகங்ளைப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

புதுவகையான இந்த ரகம் உள்ளூரில் தயாரிக்கப்பட்டது. எனினும் அதன் வகை தெரியவில்லை. இப்போது நடத்தப்பட்ட தாக்குதல் அதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கானதா என்றெல்லாம் என பல கோணங்களில் பொலிஸார், இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பூநொச்சிமுனை முகைதீன் ஜும்ஆஹ பள்ளி வீதியில் உள்ள வீடு ஒன்றின் கூரை மீது நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 8.30 மணிக்கு பாரிய சத்தத்துடன் குண்டு வெடித்து தீ பிளம்பு வெளியேறியதையடுத்து வீட்டின் அறைப் பகுதியிலுள்ள இரு ஓடுகள் உடைந்து கீழே வீழ்ந்துள்ளன. ஆனால் வீட்டில் இருந்த எவருக்கும் எதுவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை. குண்டு வெடிப்பின் போது ஏற்பட்ட புகை மனத்தினால் பெண் ஒருவர் வாந்தி எடுத்துள்ளார்.

குண்டு வெடிப்பால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார், இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இருந்தபோதும் குண்டுதாக்குதலுக்கான எதுவிதமான தடயங்களும் இல்லாத நிலையில், இது குண்டுதாக்குதல்தானா எனக் கண்டறிய முடியாது குழப்பமடைந்தனர்.

இந்த நிலலையில் நேற்று செவ்வாய்க்கிழமை தடவியல் பிரிவு பொலிஸார் வரவழைக்கப்பட்டு அவர்கள் மேற்கொண்ட சோதனைகளின் அடிப்படையின் வீட்டின் பின்பகுதியிலுள்ள அறைப் பகுதியை கொண்ட கூரை மீது இந்தக் குண்டு தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும், அந்த குண்டில் இருந்து வெளிவந்த சிறிய ரக சன்னங்கள் வீதியில் அடைக்கப்பட்ட தகரங்களை துளைத்துக் கொண்டு போயுள்ளமையும் கண்டு பிடிக்கப்பட்டது

இதனைத் தொடர்ந்து வெடித்த குண்டில் இருந்து வெளியேறிய சிறிய ரக சன்னங்களை கண்டுபிடித்து அவர்கள் மீட்டனர். குண்டை யாரே வீட்டின் பின் பகுதி வீதிவழியாக சென்று வீட்டின் மீது வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர் எனவும், இது உள்ளூரில் தயாரிக்கப்பட்ட குண்டாக இருக்கலாம் எனவும் கூறப்பட்டது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அடுத்த மாதம் முதல் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை அறிமுகம்



அடுத்த மாதம் முதல் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை அறிமுகப்படுத்தவுள்ளதாக ஆள் பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேசிய அடையாள அட்டையை பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் மோசடிகள், இலத்திரனியல் அடையாள அட்டை அறிமுகத்தின் பின்னர் இடம்பெறாதென ஆள்பதிவுய் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரதீப சபுதந்திரி தெரிவித்துள்ளார்.

புதிய அடையாள அட்டையில் கைவிரல் அடையாளம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

# புளொட் செயலதிபர் உமாமகேஸ்வரனின் உருவச்சிலை வவுனியாவில் திறந்து வைப்பு



(கே.வசந்தன்)


தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) செயலதிபர் க.உமாமகேஸ்வரனின் உருவச்சிலை வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்திக்கு அண்மையில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

கழகத்தின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் க.சந்திரகுலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்து கொண்ட யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் உருவச்சிலையை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து அன்னாரது உருவச்சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் தமிழீழ விடுதலைக்கழகத்தின் முக்கியஸ்தர்கள், தமிழ்தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளின் முக்கியஸ்தர்கள், பொது அமைப்பினர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



















# திருத்தப்பட்ட நீர்க் கட்டணக் கொள்கையை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம்

திருத்தப்பட்ட நீர்க் கட்டணக் கொள்கை மற்றும் திருத்தப்பட்ட நீர்க் கட்டணச் சூத்திரத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பின் போது அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன இதனை தெரிவித்தார்.

இந்தத் திருத்தம் அடுத்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.





## ஜனாதிபதி தேர்தலை பிற்போட வேண்டாம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கோரிக்கை

எந்தவொரு காரணத்திற்காகவும் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடாது உரிய நேரத்தில் நடத்துமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொது செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ, கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட கட்சியின் பிரதிநிதிகள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

## ஜனாதிபதியின் பதவிக் காலச் சர்ச்சை; திருத்தம் செய்ய அமைச்சரவை முடிவு!

“அரசமைப்பின் 83 ஆவது உறுப்புரையின் (ஆ) பிரிவைத் திருத்தம் செய்வதற்கான சட்டமூல வரைவை வர்த்தமானியில் வெளியிட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.”

– இவ்வாறு அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பின் போது பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“அரசமைப்பின் 83 ஆவது உறுப்புரையில் ஜனாதிபதியின் பதவிக் காலம் மற்றும் நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் தொடர்பில் முரண்பாடு நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது.

அதன்படி, ‘ஆறு வருடத்திற்கு மேல்’ என்பதற்குப் பதிலாக ‘ஐந்து வருடங்களுக்கு மேல்’ என அரசமைப்பின் 83 ஆவது உறுப்புரிமையின் (ஆ) பிரிவைத் திருத்தம் செய்யக் கடந்த வாரம் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

அதன்பிறகு, சட்டவரைஞரால் இந்த திருத்தம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட சட்டமூலவரைவுக்கு சட்டமா அதிபரினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

தற்சமயம் அதனை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் அதன் பின்னர் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.”– என்றார்.



# வங்காள விரிகுடா, அரபுக் கடற்பிராந்தியங்களுக்கு செல்வதை தவிர்க்குமாறு மீனவர்களுக்கு எச்சரிக்கை

தென்மேற்கு பருவப்பெயர்ச்சியால் நாட்டில் தற்போது நிலவும் கடும் காற்று மற்றும் மழையுடனான வானிலை தொடர்ந்து நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் 75 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் இடைக்கிடையே மழை பெய்யுமென்றும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நுவரெலியா, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தொடர்ச்சியாக மழையுடனான வானிலை நீடிப்பதாகவும் இடைக்கிடையே மின்தடை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மத்திய மலைநாட்டின் மேற்குச் சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மணிக்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வங்காள விரிகுடா மற்றும் அரபுக் கடற்பிராந்தியங்களுக்கு செல்வதை தவிர்க்குமாறு மீனவர்கள் மற்றும் கடல் சார் பணிகளில் ஈடுபடுவோருக்கு வளிமண்டலவியல்திணைக்களம்அறிவுறுத்தியுள்ளது.

மேற்படி கடற்பிராந்தியங்களில் மணிக்கு 70 முதல் 80 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

வங்காள விரிகுடா மற்றும் அரபுக் கடற்பிராந்தியங்களில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு திரும்ப வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் தினம் இந்த மாத இறுதிக்குள் அறிவிக்கப்படும்!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் திகதியை இம்மாத இறுதிக்குள் அறிவிப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க நேற்று உத்தியோகப்பூர்வமாக அறிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று முற்பகல் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் திகதியை அறிவிப்பதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் கிடைத்துள்ள நிலையில், இந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு தொடர்பில் வெளியிடப்படும் பல்வேறு வதந்திகள், கருத்துகள் போன்றவற்றை தெளிவுபடுத்துவதற்காகவே இந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்பாடு செய்ததாக தேர்தல்கள் ஆணைகுழுவின் தலைவர் கூறினார்.

1976 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக தேர்தல்கள் திணைக்களத்திலும் பின்னர் ஆணைக்குழுவிலும் கடமையாற்றி கிட்டத்தட்ட 15 முதல் 20 இற்கு மேற்பட்ட தேர்தல்களை நடத்தியுள்ள போதிலும் இதுபோன்றதொரு சூழலை தாம் இதற்கு முன்னர் கண்டதில்லை எனவும் தேர்தல்கள் ஆணையாளர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அரசமைப்பின் பிரகாரம் செப்டெம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 ஆம் திகதிக்கு இடைப்பட்ட ஒருநாளில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டுமெனவும் தேர்தலுடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்தி அதன் அடிப்படையிலேயே தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசமைப்பு மற்றும் ஜனாதிபதித் தேர்தல் சட்டங்களுக்கு அமைய மாத்திரமே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் திகதி தீர்மானிக்கப்படும் எனவும், வேறு எந்தவொரு காரணிகளும் இந்த விடயத்தில் கருத்திற்கொள்ளப்படமாட்டாது எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் வலியுறுத்தினார்.

2024 ஆம் ஆண்டுக்காக பிரதான வாக்காளர் இடாப்பு மற்றும் புதிய வாக்காளர்களின் விபரங்கள் அடங்கிய வாக்காளர் இடாப்பு ஆகியன தயாரிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்ட அவர் இம்முறை ஒரு கோடி 71 லட்சத்து 40 ஆயிரம் வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக உரிய அரச நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும், உள்ளூராட்சி மன்ற தேர்தல் வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட நியமனங்கள் தமது அறிவுறுத்தல்களுக்கு அமைய இரத்துச் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

# 22ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டமூலம் குறித்து சட்டத்தரணிகள் ஒன்றிணைவு தெளிவுபடுத்துகிறது

## அநாவசிய வேலை என விளக்கம் தெரிவிப்பு

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 22 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்டாலும் அது தொடர்பில் மக்கள் கருத்துக்கணிப்பை நடத்த வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்க வேண்டிய சூழ்நிலை ஜனாதிபதிக்கு உருவாகுமென சட்டத்தரணிகள் ஒன்றிணைவு தெரிவித்துள்ளது.

அந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு 30 நாள்களுக்குள் மக்கள் கருத்துக் கணிப்பை நடத்த வேண்டிய சூழ்நிலை உருவாகுமென அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக 2 தேர்தல்களை நடத்த வேண்டிய சுமை இலங்கைக்கு ஏற்படுவதுடன், அது நெருக்கடியான நிலையை தோற்றுவிக்குமென சட்டத்தரணிகள் ஒன்றிணைவு எச்சரித்துள்ளது.

மக்கள் கருத்துக்கணிப்பை நடத்துவதற்கு மாத்திரம் பல பில்லியன் ரூபாவை செலவிட நேரிடும் என சுட்டிக்காட்டிய சட்டத்தரணிகள் ஒன்றிணைவு, உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு போதுமான நிதி இல்லையென இலங்கை அரசாங்கம் பல தடவைகள் அறிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றம் அல்லது ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் வரையறுக்க வேண்டிய அவசர தேவை ஏற்படவில்லை என அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்பு திருத்தம், தேர்தல் முறையை மேலும் நெருக்கடிக்கு கொண்டுசெல்வதற்கான முயற்சியாகும் என அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நாடாளுமன்ற தேர்தலும் நடத்தப்பட வேண்டுமென சட்டத்தரணிகள் ஒன்றிணைவு வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்பு திருத்தச் சட்டமூலத்தை சட்டத்தரணிகள் ஒன்றிணைவு நிராகரிப்பதுடன், அது இந்த நாட்டின் தேர்தல் முறையை சீர்குலைக்கும் முயற்சியெனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

அனைத்து ஜனநாயக சக்திகளும் இந்த தவறான முயற்சிகளுக்கு எதிராக ஒன்றிணையுமென எதிர்பார்ப்பதாக சட்டத்தரணிகள் ஒன்றிணைவு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பத்துக்கும் அதகமான ஜனாதிபதி சட்டத்தரணிகள், பேராசிரியர்கள் உள்ளிட்ட ஏராளமான சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

# ஐக்கிய தேசிய கட்சியில் இணைத்து கொள்வதற்கான ஜனாதிபதியின் யோசனையை நிராகரித்தது ஐ.ம.ச.!






தேசத்தைப் பாதுகாப்பதற்காக ஆதரவை வழங்கினால் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அதன் உறுப்பினர்களை மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியில் இணைத்துக் கொள்வதற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனையை ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"தேசத்தைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளித்தால் அதன் உறுப்பினர்களை ஐக்கிய தேசிய கட்சியில் இணைத்துக் கொள்வதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எனினும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களான பிரசன்ன ரணதுங்க, பிரசன்ன ரணவீர மற்றும் ரோஹித அபேகுணவர்தன உள்ளிட்டவர்களுடன் ஒரே மேடையில் நிற்பதற்கு எங்களுக்கு விருப்பமில்லை. இந்த வாய்ப்பை ஏற்பதற்கு நாங்கள் விரும்பவும் இல்லை.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடலாமா, வேண்டாமா என்ற குழப்பத்தில் உள்ளார் எனத் தெரிகிறது.

ஏனெனில் அவர் முன்னர் கூறியதைப் போன்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களின் ஆதரவைப் பெற முடியாமல் போயுள்ளது.

எனினும் அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது ஐக்கிய மக்கள் சக்திக்கு சாதகமாகவே அமையும்."– என்றார்.

## அநுராதபுரத்தில் நில அதிர்வு

ஆநுராதபுரத்தில் சிறிய அளவிலான நில அதிர்வு ஒன்று நேற்று உணரப்பட்டுள்ளது.

புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் இதனை அறிவித்துள்ளது.

இந்த நில அதிர்வு ரிக்டர் அளவுகோலில் 2.7 மெக்னிடியூட்டாக பதிவாகியுள்ளது.

அநுராதபுரத்திலிருந்து வடக்காக 41 கிலோ மீற்றர் தொலைவில் இந்த நில அதிர்வு பதிவானதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்துப் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

## நிமல் சிறிபால டி சில்வாவுக்கு நீதிமன்றம் அழைப்பாணை!

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை அனுப்பியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமை அலுவலகத்துக்குப் பிரவேசிப்பதைத் தடுக்கும் வகையில் நுழைவாயில் பூட்டப்பட்டிருந்தமை தொடர்பில் அதன் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரா வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.



இதன்போது எதிர்வரும் 19 ஆம் திகதி மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு அழைப்பாணை விடுக்குமாறு நீதிவான் லோச்சனி அபேவிக்ரம உத்தரவிட்டுள்ளார்.

## இலங்கையின் எதிர்காலம் பற்றி பத்திரிகைக் கட்டுரைப் போட்டி

நிதி முகாமைத்துவ சட்டமூலங்கள் மற்றும் பொருளாதார மாற்ற சட்டமூலங்கள் குறித்து பாடசாலை மாணவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் பத்திரிகை கட்டுரைப் போட்டியொன்றை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

"முறையான அரச நிதி முகாமைத்துவம் மற்றும் நிலையான பொருளாதார மாற்றத்தின் மூலம் 2048 ஆம் ஆண்டளவில் வளர்ச்சியடைந்த எனது நாடு" என்ற கருப்பொருளின் கீழ் நடத்தப்படும் இந்த தேசிய அளவிலான பத்திரிகைக் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்கள் மற்றும் வெற்றி பெற்ற பாடசாலைகள் என்பவற்றுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அரச பாடசாலைகள் மற்றும் பிரிவெனா கல்வி நிறுவனங்கள், கல்வி அமைச்சின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் பிக்குகள் மற்றும் பிக்குணிகள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது..

ஜனாதிபதி அலுவலகம், கல்வி அமைச்சு மற்றும் அரசாங்க தகவல் திணைக்களம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த போட்டிக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதி ஜூலை 31 ஆம் திகதியாகும். மேலும் போட்டி நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவம், ஆக்கங்களை அனுப்ப வேண்டிய விதம் தொடர்பான மேலதிக தகவல்களையும் சட்டமூலங்களையும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் https://www.dgi.gov.lk/contact-us/public-finance-management-bill இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 17.07.2024




இன்று நீங்கள் எளிதான அணுகு முறையை மேற்கொள்ள வேண்டும். உரையாடும் போது வார்த்தைகளில் கவனம் தேவை. இனிமையான வார்த்தைகள் நல்ல பலனைத் தரும்.

இன்று புதிய பணி வாய்ப்புகளை இழக்கும் அதிர்ஷ்டமற்ற நிலை காணப்படும். இன்று ஏமாற்றமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். இதனால் உங்கள் மன உறுதியை இழந்து விடாதீர்கள்.

உங்கள் துணையுடன் சச்சரவு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சூடான விவாதங்கள் ஏற்படலாம். இது மகிழ்ச்சியைக் குறைக்கும்.

இன்று பண வரவிற்கான வாய்ப்பு குறைவு. பண இழப்பு ஏற்படும் என்பதால் பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.




இன்று உங்களிடம் தைரியமான உறுதி யான அணுகுமுறை காணப்படும். உங்கள் இலக்குகளில் வளர்ச்சியும் வெற்றியும் அடைவீர்கள்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப் பதற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் செயல்திறனில் நல்ல தரத்தை பராமரிக்க இயலும்.

உங்கள் மகிழ்ச்சியான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள்.இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை இணைந்து கொண்டாடுவீர்கள்.

அதிக பண வரவு காரணமாக உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கையுடன் உங்கள் செயல்களை மேற்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. புதிய நண்பர்களைப் பெறுவீர்கள். அவர்களின் ஆதரவு கிடைக் கும்.

உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள்.உங்கள் செயல்திறன் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்களுக்கு பாராட்டு கிடைக் கும்.

நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையுடன் சுமூகமான உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும். உங்களிடம் இன்று மன உறுதி காணப்படும்.




இன்று சவாலான சூழ்நிலைகள் காணப்படும். அதனால் வெறுமையை உணர்வீர்கள். உறுதியான போக்கை மேற்கொள்வதன் மூலம் நீங்கள் பிரச்சினைகளை சமாளிக்க முடியும்.

உங்கள் கடின உழைப்புக்குத் தகுத்த பலன்கள் கிடைக்காது. இதற்குஉங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிடாததே காரணம்.

உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். இதனை உங்கள் துணையிடத்தில் வெளிப் படுத்துவீர்கள்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் சேர்ந்து காணப்படும். பணப்புழக்கம் குறைவாக காணப்படும். பண இழப்பு களை தவிர்க்க நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

பதற்றம் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும்.. ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் இந்தச் சூழலைக் திறமையாகக் கையாள முடியும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பயனுள்ள யுத்திகளைக் கையாண்டு கவனமாக பணியாற்றினால் பணிகள் சுமூகமாக நடக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. இதனால் உறவின் நல்லிணக்கத் தைக் கெடுக்கும் கவனமற்ற வார்த்தைகளை தவிர்க்க லாம்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சளி சம்பந்த மான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நீங்கள் சிறந்த மன ஆற்றலு- டனும் காட்டுப்பட்டுடனும் காணப்படும் சிறந்த நாள். இன்று பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் அமைதி பெறுவீர்கள்.

இன்று பணிகளை குறித்த நேரத்தில் முடிக்கும் சூழல் காணப்படும். பணிகளை விரும்பி எளி தாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரிடையேயும் பரபஸ்பர மதிப்பு உயரும்.

பணப்புழக்கம் இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு பயன்படுத்து வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்தை உணர்வீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கையுடன் இருந்தால் உங்கள் இலக்குகளில் வெற்றி அடையலாம். பதற்றம் மற்றும் பாது காப்பின்மை உணர்வை கட்டுப்படுத்தி நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

உங்கள் பணியில் சில தடைகள் காணப்படும். உறுதியுடன் இருந்தால் தடைகளை சமா ளித்து சிறப்பாக செயலாற்றலாம்.

தகவல் பரிமாற்ற பிரச்சினையும் கருத்து வேறுபாடும் காணப்படும். அமைதியாக இருப்பது மிகவும் உதவி கரமாக இருக்கும்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்காது. இந்து கூடுதல் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. வயிற்று உபாதை காரணமாக அவதிப்பட நேரலாம்.




அமைதியாக இருப்பதன் மூலம் முறையான முடிவுகளை எடுக்க இயலும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் பதற்றமின்றி சமநிலையில் இருக்க லாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். இதனால் பணியில் தவறுகள் நேரலாம். எனினும் கவனமாகப் பணியாற்றினால் இன்று சிறப்பாக இருக்கும்.

இன்று உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை பராமரிப்பது நல்லது. இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதி கரிக்கும் பொறுப்புகளை சமாளிப்பது கடினமாக உணர் வீர்கள்.

பதற்றம் காரணமாக முதுகு வலி ஏற்படலாம். பிரார்த் தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.07.2024




இன்று பதற்றமும் கவனமின்மையும் காணப்படும். இதனை சமாளிக்க அமை தியை மேற்கொள்ள வேண்டும். இன்று சகஜமான அணுகுமுறையுடன் உங்கள் பணிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடத்தில் பதற்றம் காரணமாக தாமதமாக பணிகள் நடைபெறும். பணிகளைக் கையா ளும் போது பொறுமையான அணுகுமுறை தேவை.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வ தும் நட்பான அணுகுமுறை கொள்வதும் இருவரும் மகிழ்ச்சியுடன் இருக்க உதவும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும் . அதிகரிக்கும் செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

அதிக பதற்றம் காரணமாக தலைவலி ஏற்படலாம். இறை வழிபாடும் பிரார்த்தனையும் மேற்கொள்வது சிறந்தது.




இன்று ஸ்திரமான. இலக்குகளை வெல்லக்கூடிய இனிமையான தரு ணங்களை சந்திக்கும் நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன் கள் கிடைக்கும். புதிய பணி வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பதன் மூலம் நல்லுறவு வளரும். இருவரிடையே பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படும்.

பண வரவு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் கடின உழைப்பின் காரணமாக நீங்கள் ஊக்கத்தொகை வகையில் பணம் பெறுவீர்கள்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் மன உறுதி காரணமாக நீங்கள் வெற்றி பெறலாம். இன்று சிறந்த முன்னேற்றம் கண்டு மகிழ் வீர்கள்.

உங்கள் திறமைகள் வெளிப்படும். அது உங்கள் செயல்திறனில் பிரதி பலிக்கும். உங்கள் சக பணியாளர்களுக்கு நீங்கள் ஒரு எடுத்துக்காட்டாக இருப்பீர்கள்.

இனிமையான வார்த்தைகளும் நல்ல புரிந்துணர்வும் உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க உதவும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றல் காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இந்த நாளை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.




இன்றைய நாள் உங்கள் எதிர்பார்ப் பின் படி இருக்காது. எதிர்மறையான பலன்கள் ஏமாற்றத்தை தரும். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் ஒன் றிற்கு இரண்டு தடவை யோசிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை யும் பாதுகாப்பின்மை உணர்வையும் தவிர்த்தல் வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சிறந்த புரிந்துணர்வை பரா மரிக்க இயலாது. உங்களின் எரிச்சல் உணர்வை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். அதிக செலவுகள் காரணமாக சேமிப்பது கடினமாக இருக்கும்.

கோபத்தின் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

